## திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர், அவர்களின் செயல்முறைகள்
## முன்னிலை – டாக்டர்ஆல்பி ஜான் வர்கீஸ், இ.ஆ.ப.,

செ.மு.ந.க.எண் 14160/2017/பஅ 3 நாள் – .01.2022

பொருள்– ஊரக வளர்ச்சி அலகு – திருவள்ளூர் மாவட்டம் – கருணை அடிப்படையில் பணிநியமனம் – இரா.கி.பேட்டை ஊராட்சி ஒன்றியம் – வி.பி.ஆர்.புரம் ஊராட்சி செயலாளர்– திரு.பு.தீமத்தேயு (லேட்) 28.05.2016–ல் பணியிடைக் காலமானவரின் மகன் திரு.தீ.புண்ணியன் – என்பவருக்கு கருணை அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது – பணிவரன்முறை செய்து உத்தரவிடல்.

படிக்கப் – பட்டவை:

1. அரசாணை(நிலை)எண்,102, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்.13.07.2015.
2. மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் அவர்களின் செ.மு. ந.க.எண். 14160/2017/பஅ3. நாள்.19.02.2018.
3. மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் அவர்களின் கடித ந.க.எண். 14160/2017/பஅ3. நாள்.25.10.2018
4. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நாள்.26.02.2021.
5. அரசுக் கடித எண்.6895/இ3/2021–5 நாள்.14.12.2021.
6. இயக்குநர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18355/2021/டி2, நாள்:18.12.2021
7. தொடர்புடைய ஆவணங்கள்

********

உத்தரவு–

பார்வையில் காணும் கடிதங்கள் மற்றும் அரசாணைகளுக்கிணங்க இரா.கி.பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வி.பி.ஆர்.புரம் ஊராட்சியில் ஊராட்சி செயலாளராக பணிபுரிந்து 28.05.2016 அன்று பணியிடைக்காலமான திரு.பு.தீமத்தேயு(லேட்) என்பவரின் மகன் திரு.தீ.புண்ணியன் என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி விதிகளுக்கு உட்பட்டு அரசு ஊழியர் இறந்த மூன்று ஆண்டுகளுக்குள் விண்ணப்பம் அளித்ததை தொடர்ந்து தனியரின் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டது. அதன்படி விண்ணப்பதாரர் கருணை அடிப்படையில் பணிநியனம் கோரி விண்ணப்பித்த நாளில் குறைந்தபட்சம் 18 வயதை பூர்த்தி செய்திருந்ததாலும், அவர் இடைநிலை கல்வி பள்ளி இறுதி வகுப்பு பொது தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்ததாலும், அவருக்கு பணிநியமனம் வழங்க இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபனை ஏதும் தெரிவிக்காததாலும், மேற்படி தனியரின் குடும்பம் வறுமை நிலையில் இருந்ததாலும், உரிய அரசாணைகளின்படி திரு.தீ.புண்ணியன் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டது.

அரசாணை (நிலை) எண்.48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யு1) துறை நாள்.26.02.2021–ன்படி கருணை அடிப்படையில் 02.02.2016 முதல் 31.12.2019 வரை பணியமர்த்தப்பட்டு, விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்கு உட்பட்டு பணிவரன்முறைபடுத்தப்படுகிறது என்றும், மேற்காணும் ஆணையினை செயல்படுத்த, சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appionting authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் உரிய செயல்முறை ஆணை பிறப்பிக்கலாம் என ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து தற்போது திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.தீ.புண்ணியன் என்பவர் பணியில் சேர்ந்த நாளான 26.02.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது. இவருக்கு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் நடைமுறையில் உள்ள விதிகளின்படி ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை இருப்பின் அவைகளை பெற தகுதியுடையவராகிறார்.

மேற்கண்ட பணிவரன்முறை விவரம் தனியரது பணிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது என சான்றளிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருவள்ளூர்

3/3 28/01

28/1/22

பெறுநர்–
திரு.தீ.புண்ணியன்,
இளநிலை உதவியாளர்,
திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியம்,
(சார்ந்த அலுவலர் மூலமாக).

நகல்–
1. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, சென்னை.
2. திட்ட இயக்குநர்/இணை இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவள்ளூர்.
3. வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ/கி.ஊ), திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியம்.
4. பஅ3 இருப்பு கோப்பு.